ANNEXURE – III (Refer Page 2)

## தமிழ்நாடு அரசு

## சுருக்கம்

சுற்றுச்சூழல் – நீர் ஆதாரங்களின் தன்மையை பாதுகாத்தல் – நீரை அதிக அளவில் மாசுபடுத்தும் தொழிற்சாலைகள் நிறுவுவதை வரன்முறைப்படுத்தல் – நீர் ஆதாரங்களிலிருந்து 5 கி.மீ தூரம் வரை தொழிற்சாலைகள் நிறுவுவதை தடை செய்தல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

## சுற்றுப்புறம் & வனத் (சுக 3) துறை

அரசு ஆணை நிலை எண்.127 நாள் 08.05.1998.

பார்வை :

1. அரசாணை (நிலை) எண்.1இ சுற்றுப்புறம் & வனத்துறை நாள் 06.02.1984.
2. அரசாணை (நிலை) எண்.213, சுற்றுப்புறம் & வனத்துறை நாள் 30.03.1989.

ஆணை :

06.02.1984ஆம் நாளிட்ட சுற்றுப்புறம் மற்றும் வனத்துறை அரசாணை (நிலை) எண்.1இல், ஆறுகள், ஓடைகள் மற்றும் அணைகளிலிருந்து 1 கி.மீ. தூரம் வரை எந்தவித அதிக மாசு ஏற்படுத்தும் தொழிற்சாலைகளையும் நிறுவக்கூடாது என்றும் அதிகமாக மாசு ஏற்படுத்தும் தொழிற்சாலைகள் பற்றிய பட்டியலை அனைத்து உள்ளாட்சி நிறுவனங்களுக்கும் தெரிவிக்க வேண்டும் என தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் கேட்டுக் கொள்ளப்பட்டது. 30.03.1989ஆம் நாளிட்ட சுற்றுப்புறம் மற்றும் வனத்துறை அரசாணை (நிலை) எண்.213இல் குறிப்பிடப்பட்ட அதிக மாசு ஏற்படுத்தும் தொழிற்சாலைகளை சில நீர் ஆதாரங்களிலிருந்து 1 கி.மீ. தொலைவிற்குள் அமைக்கக் கூடாது என அரசு ஆணையிட்டுள்ளது. (அந்த நீர் ஆதாரங்களின் விவரப் பட்டியலும் அவ்வாணையில் இணைக்கப்பட்டுள்ளது).

2. தோல் தொழிற்சாலைகள் தொடர்பாக உச்சநீதி மன்றத்தில் வேலூர் நல மக்கள் மன்றத்தின் மூலமாக தொடுக்கப்பட்ட வழக்கில் உச்ச நீதிமன்றம் வெளியிட்ட உத்தரவிற்கிணங்க அரசாணை (நிலை) எண்.213 சுற்றுப்புறம் & வனத்துறை நாள் 30.03.1989ஐ உடனடியாக தீவிரமாக கடைபிடிக்க வேண்டும் எனவும் அரசாணையின் இணைப்பில் கூறப்பட்டுள்ள தொழிற்சாலைகள் எதுவும் புதியதாக தடைசெய்யப்பட்ட பகுதியில் நிறுவக்கூடாது எனவும் மேலும் அதற்காக நிறுவப்பட்டுள்ள குழுமம் இத்தொழிற் சாலைகளைப் பற்றி ஆராய்ந்து ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள தொழிற்சாலைகளை ஆய்வு செய்து தேவைப்படின் வேறிடத்திற்கு மாற்றுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

3. மக்களிடையே மாசு கட்டுப்பாடு பற்றிய விழிப்புணர்வு ஏற்படுவதற்கு முன் பல தொழிற்சாலைகள் காவிரி, பெண்ணையாறு, பாலாறு, வைகை, தாமிரபரணி மற்றும் உபநதிகளின் அருகில் தொடங்கப்பட்டுவிட்டன. தொழிற்சாலைகள் வெளியேற்றும் கழிவு நீர் மற்றும் தொழிற்சாலை கழிவுநீர் ஆகியவற்றால் நிலம் மற்றும் நீரின் தன்மை வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. இதனை தடுத்து நிறுத்தாமல் தொடர்ந்து அனுமதிக்கப்படும்போது நீர் வளமும் அதன் தன்மையும், மக்கள் நலமும், பிற உயிர்வாழ் இனங்களின் நலமும் பாதிக்க வாய்ப்புள்ளது. தற்போது, தொழிற்சாலைகள் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் / தனியார் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்து செயல்படும்படி அரசினால் வற்புறுத்தப்பட்டு வருகிறது.

4. தற்போது சில தொழிற்சாலைகள் நீர் ஆதாரங்களிலிருந்து, நீரை பயன்படுத்தி தொழில் வளாகங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. நீரின் தன்மையை சரிவர பாதுகாக்கவும், நீர்வளம், மக்கள் வளம், உயிர்வாழ் இனங்களின் நலன் ஆகியவைகளைக் கருத்தில் கொண்டும், உயர்நீதிமன்றம் மற்றும் உச்சநீதிமன்றங்களின் தீர்ப்பின் அடிப்படையிலும், இலட்சக்கணக்கான மக்களின் நலனை கருத்தில் கொண்டு நீர் ஆதாரங்களின் தன்மையை பாதுகாக்கவும் அதே நேரத்தில் தொழில் வளர்ச்சி குன்றாமல் இருக்கவும் நீரை அதிக அளவில் மாசுபடுத்தும் தொழிற்சாலைகள் தொடங்கப்படுவதை வரன்முறைப்படுத்துவது பற்றி ஒரு கொள்கை (Policy) எடுக்க வேண்டிய நிலை அரசுக்கு ஏற்பட்டுள்ளது.

5. மேலே உள்ள பத்தி 4இல் கண்டுள்ள சூழ்நிலைகளின் அடிப்படையில் அரசாணை (நிலை) எண்.213 சுற்றுப்புறம் & வனத்துறை நாள் 30.03.1989ஐ சற்று விரிவுபடுத்தி தீவிரமாக அமுல்படுத்த கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது.

1) அரசாணை (நிலை) எண்.213 சுற்றுப்புறம் & வனத்துறை 30.03.1989ஐ முழு அளவில் தீவிரமாக நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

2) தமிழ்நாட்டில் முக்கிய நீர் ஆதாரங்களான காவிரி மற்றும் அதன் உபநதிகள் பெண்ணையாறு, பாலாறு, வைகை மற்றும் தாமிரபரணி ஆகிய நதிகளிலிருந்து 5 கி.மீ தூரத்திற்குள் நீரை அதிக அளவில் மாசுபடுத்தும் எந்த தொழிற்சாலையும் (சிவப்பு வகை) நிறுவப்பட அனுமதி அளித்தல் கூடாது.

3) பிறவகை தொழிற்சாலைகளான ஆரஞ்சு மற்றும் பச்சை தொழிற்சாலைகளுக்கு நீர் ஆதாரங்களிலிருந்து நீரை எடுப்பதற்கு அனுமதி வழங்குவதற்கு முன்னரும், புதிய தொழில் வளாகங்கள் ஏற்படுத்துவதற்கு முன்னரும் முறையே பொதுப்பணித்துறை தொழில்துறை மற்றும் பிறதுறைகள் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறையை கலந்து ஆலோசிக்கப்படல் வேண்டும். இனி வரும் காலங்களில் புதியதாக தொடங்கவிருக்கும் தொழிற்சாலைகளுக்கு இந்த நடைமுறை பொருந்தும்.

4) ஆரஞ்சு மற்றும் பச்சை வகை தொழிற்சாலைகள் நிறுவுவதற்கான விதிமுறைகளின் வரைமுறைகள் குறித்து, உள்ளாட்சி நிறுவனங்களுக்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தெளிவாக்கி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே.எஸ்.ஸ்ரீபதி
அரசுச் செயலாளர்.